# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.367/2018 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா- 02 ( PW- 02 ) |
| பெயர் | :- | தயாநிதி |
| தேதி | :- | 07-10-2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

நான் அரியானூரில் வசிக்கிறேன். வாதி ஜெயபாலை தெரியுமா என்றால் வாதியையும் தெரியும் பிரதிவாதியையும் தெரியும். நான் உணவகம் நடத்துகிறேன். முதல்விசாரணைக்கான நிருபண ஆணையுறுதி பத்திரத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். ஜெயபாலன் தயார் செய்து எடுத்துவந்ததில் நான் கையொப்பம் இட்டேனா என்றால் ஆமாம். 03.01.2016-ஆம் தேதியன்று தட்டச்சு செய்யப்பட்ட 10,68,000/- உரூபாய்க்கான கடனுறுதி சீட்டையும் அதே தொகைக்கான ஒரு பஞ்சாயத்து முச்சலிக்கையும் தட்டச்சு செய்துகொண்டு வந்தார்கள் என்று நான் சொல்லி -யுள்ளது சரிதான். யார் தட்டச்சு செய்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அதில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் படித்துப் பார்த்தேன். அதன்பிறகு தான் என் கடையில் வைத்து ஜெயபாலும் ராதாகிருஷ்ணனும் பேசினார்கள் என்றால் சரிதான். என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியும். ஏற்கனவே தட்டச்சு செய்துவந்த தாளில் கண்டுள்ளபடி 05 மாதம் காலகெடு கேட்டனர். அவர்கள் அங்கு பேசிக்கொண்டதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

03.01.2016-ஆம் தேதியன்று பிரதிவாதி ராதாகிருஷ்ணன் என்னுடைய கடைக்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அன்று பிரதிவாதி வேறு ஆவணங்கள் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. முச்சலிக்கை எத்தனை பக்கம் இருந்தது என்று எனக்கு தெரியவில்லை. முச்சலிக்கையில் தரப்பினர்கள் எத்தனை கையொப்பம் இட்டனர்கள் என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி என் கடைக்கு வரவே இல்லை என்றும் அதனால்தான் எத்தனை பக்கத்தில் கையொப்பம் இட்டார்கள் என்று தெரியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நானும் ஜனகராசுனும் சான்றொப்பம் இட்டோம். மேலும் மூவர் இருந்தனர். ஜனகராஜன் எனது உறவினர் என்றால் சரிதான். சான்றொப்பம் இட்டது யார் என்றால் நான், ஜனகராஜன், மற்றொருவர். அந்த மற்றொருவர் பெயர் எனக்கு தெரியவில்லை. ஜெயபாலன் தயாரித்த ஆவணத்தில் நான், ஜனகராஜன் ஆகியோர் பொய்யாக சான்றொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. வழக்கு கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பத்தை நான் பார்த்தேன். கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும் பஞ்சாயத்து முச்சலிக்கையில் உள்ள கையொப்பமும் பிரதிவாதி ராதாகிருஷ்ணனின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் பிரதிவாதி இல்லை என்றும் என்முன்னிலையில் அவர் எந்த ஆவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதி அழைத்துதான் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். நான் வாதி அனுகூலமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.